සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

මගේ අංකය
எனது இல DDD/HO/MF/05/02/01
My No

ඔබේ අංකය
உமது இல ..........................................
Your No

දිනය
திகதி 2017.04.07
Date

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்று நிருபம் :- ச.ச.அ.வ. 2017/05**

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்,

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் அங்கத்தவர்களுக்கு எல்.பீ. கேஸ் (L.P. Gas) வசதியினை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கல்.**

**01. அறிமுகம் :-**

சமுர்த்தி சமுதாய அடிப்படை குறுநிதி வலையமைப்பில் இணைந்துள்ள சமுர்த்தி பயனுகரிகள் உட்பட குறைந்த வருமானம் பெறுவோருக்கு L.P. கேஸ் வசதியினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான கேஸ் சிலிண்டர் உள்ளிட்ட பொருள் தொகுதியினை குறைந்த விலைக்கு வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட லாப்ஸ் நிறுவனம் (LAUGFS) ஒரு திட்டத்தினையும் அதற்கான கோரிக்கையினையும் முன்வைத்துள்ளது.

இதன் பிரகாரம் இவ் வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதனால் பின்வரும் குறிக்கோள்களையும் அடைந்து கொள்ளமுடியும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

1. குறைந்த வருமானம் பெறும் வங்கி அங்கத்தவர்களின் நாளாந்த நடவடிக்கைகளை இலகுவாக்கல்.
2. சிற்றுண்டிச்சாலை மற்றும் சுவையான தீன்பண்டங்களின் உற்பத்தி உள்ளிட்ட வருமான மீட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் வினைத்திறனை அதிகரித்தல்.
3. வங்கியின் கடன் தொகையினை அதிகரிப்பதுடன் வங்கியினை நிலைத்திருக்கச் செய்தல்.
4. சுற்றாடல் பாதுகாப்பினை உருவாக்குதல்.

இவ் L.P. கேஸ் வசதியினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் கடன் தொகை ஒன்றினை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைகள் இத்தால்

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4th floor, Sethsiripaya ,Battaramulla

අධ්‍ය ක්ෂ ජනරාල්
பணிப்பாளர் தலைமையதிபதி
Director General
Tel- 011-2873802/2872202
Fax - 011-2889002
E-mail-dg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ(මානව සම්පත්)
பணிப்பாளர் ( மனிதவளம்)
Director (Human Resource)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk
Hot Line : 0112-889007

ප්‍ර ධාන ගණකාධිකාරී
பிரதான கணக்காளர்
Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ(ක්ෂුද්‍ර මූල්‍ය )
பணிப்பாளர் (குறு நிதி )
Director ( Micro Finance)
011-2889003
011-2887469
Hot Line:0112-885582

කාර්යාලය
அலுவலகம்
Office
011-2887280
Hot Line: 011- 2887722

வழங்கப்படுகின்றது.

**02. வழங்கப்படவுள்ள பொருட் தொகுதி தொடர்பான விபரங்கள்**

L.P. கேஸ் சிலிண்டர் உள்ளிட்ட வழங்கப்படவுள்ள பொருட் தொகுதிகளின் விபரங்கள் இணைப்பு இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**03. உயர்ந்தபட்ச கடன் தொகை மற்றும் கடன் தொடர்பான விபரங்களும்.**

03.1. உயர்ந்தபட்ச கடனாக ரூபா 10,000/= தொகையினை வழங்க முடியும். கடனாளியின் கோரிக்கை, தேவைப்பாடு என்பவற்றுக்கு அமைய ஒரு கடன் தொகையினை மாத்திரமே வழங்க முடியும்.

03.2. இவ் வேலைத் திட்டத்திற்கென புதிய கடன் திட்டம் ஒன்றை செயற்படுத்திச் செல்லாது தற்போது செயற்படுத்தப்படுகின்ற கீழ்வரும் கடன் திட்டங்களின் கீழ் இக்கடனை வழங்க முடியும்.

1. நுகர்வுக் கடன் - தற்போது கூட்டுக் காப்பீட்டு திட்டத்துக்கு பங்களிப்புச் செய்துள்ள தகுதியான அங்கத்தவர்களுக்கு.
2. இடர் கடன் - வங்கியின் அங்கத்துவத்துக்கான உரிமைகளையும், தகுதியினையும் பூர்த்தி செய்திருத்தல்.
3. துரித கருத்திட்டக் கடன் - வருமானமீட்டும் செயற்பாட்டுக்கு இவ்வசதியினை பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில்
4. வாழ்வாதார அபிவிருத்திக்கடன் - வங்கி அங்கத்துவத்துக்கு உரிமையுள்ளவரும் வருமான மீட்டும் செயற்பாட்டில் ஈடுபடவுள்ளவரும், அதற்காக இவ் வசதியினை பயன்படுத்தவதற்கு எதிர்ப்பார்க்கின்றதுமான அங்கத்தவர்களுக்கு.

03.3. கடன் தொகையினை கோருவதில் இருந்து அதனை அனுமதிக்கும் வரையான அனைத்து விடயங்களும் கடன் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருப ஆலோசணைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்.

03.4. வங்கியின் ஊடாக கடன் வசதியினைப் பெற்றுக் கொள்ளாது ஒரே தடவையில் முழுத் தொகையினையும் வங்கிக்கு செலுத்துபவர்களும் இவ்வசதியினை பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்கப்படுகின்றது.

**04. கேஸ் வசதியினை பெற விண்ணப்பித்தலும் பொருட் தொகுதியினைப் பெற்றுக் கொள்ளலும்.**

04.1 வ/ப லா∴ப்ஸ் கேஸ் நிறுவனத்தின் உத்தியோகத்தர்தர்கள் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் ஊடாக குறைந்த வருமானம் பெறுவோறுக்கு அறிவூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வர். இதற்கான கூட்ட ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் பிரிவுக்கு பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

04.2. பயனுகரிகளுக்கு விளக்கமளித்து அவர்களின் சுய விருப்பத்திற்கு அமைய உரிய கேஸ் வசதியினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியின் கடன் வசதியினை பெற்றுக் கொள்வதற்கான விருப்பத்தினை அவர்களிடம் இருந்து எழுத்து மூலம் வங்கி பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

04.3. அங்கத்தவர்கள் சமுதாய அடிப்படை வங்கியின் மூலம் கேஸ் தொகுதியினை பெற்றுக் கொள்வதற்கு விருப்பத்தினை தெரிவித்தவுடன் கீழ் வரும் தகவல்களை பெற்று வ/ப லா.ஃ.ப்ஸ் நிறுவனத்திற்கு மின்னஞ்சல் / தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. விண்ணப்பிப்பவரின் பெயர் :-
2. அங்கத்துவ இலக்கம் :-
3. விண்ணப்பிக்கும் கேஸ் தொகுதி (12.5kg / 5kg)
4. முகவரி :
5. தொலைபேசி இலக்கம் :
6. சமுதாய அமைப்பின் பெயர் :

மின்னஞ்சல் முகவரி:- sales.mt@Laugfs.lk

தபால் முகவரி:- ஒரியன் சமரசேகர
பிரதிப் பொது முகாமையாளர் - புதிய விற்பனை
லாப்ஸ் கேஸ் PLC
இலக்கம் 101
மாயா அவனியு
கொழும்பு – 06

4.4. அங்கத்தவர்களினால் பிரிவுக்கு பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக விண்ணப்பிக்கும் கோரிக்கைகளுக்கே உதவிகள் வழங்கப்படும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை வங்கிகள் உரிய பரிசீலணைகளை மேற்கொண்டு சிபாரிசுடன் கட்டுப்பாட்டு சபையின் அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

4.5. கடனுக்கு விண்ணப்பிக்கும் போது இக் கடன் அனுமதிக்கப்பட்ட பின்னர் வ/ப லா.ஃ.ப்ஸ் கேஸ் நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்த கேஸ் உபகரணத் தொகுதியன் பொருட்டு குறித்த தொகையினை தனது அங்கத்தவர் சேமிப்பு வைப்பில் இருந்து செலுத்தவதற்கும் அங்கத்தவர்களின் சம்மதக் கடிதத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். இச் சம்மதக் கடிதம் பெறப்படாமல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இத் திட்டத்தின் வசதியினை பெற்றுக் கொள்ள முடியாது.

4.6. கடன் தொகை அனுமதிக்கப்பட்ட பின்னர் முகாமையாளர் கடன் விண்ணப்பதாரிக்கு கடன் தொகை அனுமதிக்கப்பட்டமை தொடர்பாக அறிவித்தல் வேண்டும். அதன் பிரதியினை வ/ப லா.ஃ.ப்ஸ் கேஸ் நிறுவனத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

4.7. கடன் தொகை அனுமதிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் வ/ப லா.ஃ.ப்ஸ் கேஸ் நிறுவனம் உரிய கேஸ் சிலிண்டர் உட்பட பொருட் தொகுதியினை உரிய நபருக்கு வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

4.8. விண்ணப்பதாரி உரிய கேஸ் சிலிண்டர் உட்பட பொருட் தொகுதியினை பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்தி ஒப்பமிட்டு வழங்கிய பொருட் பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச்சீட்டின் பிரதியினை வங்கி முகாமையாளருக்கு வழங்குதல் வேண்டும். (வ/ப லா.ஃ.ப்ஸ் கேஸ் நிறுவனத்தால்)

4.9. வ/ப லா.'.ப்ஸ் கேஸ் நிறுவனம் உரிய கேஸ் பொருட் தொகுதியினை வழங்கியமைக்கான பற்றுச் சீட்டினை வழங்கதல் வேண்டும். அதன் பின் இப் பற்றுச் சீட்டு மற்றும் பொருள் பெற்றுக் கொண்டதற்கான விபரம் என்பவற்றுக்கு அமைய இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்ட தொகைக்கு காசோலையினை வரைந்து வ/ப லா.'.ப்ஸ் நிறுவனத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அதற்கான கணக்குப் பதிவுகள் கீழ்வருமாறு மேற்கொள்ளல் வேண்டும்.

<u>05. அங்கத்தவரின் பொருட்டு வ/ப லா.'.ப்ஸ் கேஸ் நிறுவனத்திற்கு பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் வங்கியின் தரகுக் கட்டணத்தை பெற்றுக் கொள்ளல்.</u>

05.1 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி கேஸ் நிறுவனத்துக்கு பணம் வழங்கும் போதும், தரகுக் கூலியினை பெறும் போதும் பின்வருமாறு கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல் வேண்டும். (அங்கத்தவர்களின் கோரிக்கைக்கு அமைய)

பற்று – அங்கத்தவர் வைப்புக் கணக்கு (அங்கத்தவர்களிடமிருந்து அறவிடும் தொகை)

வரவு – பெற்ற வருமானம் நானாவிதக் கணக்கு (வங்கிக்குரிய தரகுக் கட்டணம்)

வரவு – நடைமுறைக் கணக்கு (அங்கத்தவர் செலுத்தியுள்ள தொகையில் தரகுக் கட்டணம் கழித்த பின் உள்ள மீதி)

05.2 தரகுக் கட்டணம் கேஸ் சிலிண்டரின் கொள்ளளவுக்கு அமைய கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். வங்கிக்குரிய தரகு கட்டணத்தை கழித்தபின் மீதியாகவுள்ள தொகைக்கு வ/ப லா.'.ப்ஸ் நிறுவனத்துக்கு காசோலை எழுதப்படல் வேண்டும்.

05.3 காசோலை வரைய வேண்டிய விதம் முகாமையாளர், கொமர்சியல் வங்கி, கொழும்பு - 04, லா.'.ப்ஸ் கேஸ் P.L.C கணக்கு இலக்கம் 1680007115 கணக்கில் வரவு வைப்பதற்கு காசோலையினை வரைந்து லா.'.ப்ஸ் கேஸ், PLC, இல. 101. மாயா அவினியு, கொழும்பு – 06 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். உரிய பொருட் தொகுதி வழங்கப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு மற்றும் பெற்றுக் கொண்டமைக்கான உறுதிப்பத்திரம் என்பன வங்கிக்கு கிடைக்கப்பெற்று 45 நாட்களுக்குள் காசோலை அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

05.4 இவ் வேலைத்திட்டத்துக்கு இணைப்பு – 02 இல் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அடங்கிய பதிவேடு ஒன்றினை வங்கியில் செயற்படுத்திச் செல்லல் வேண்டும்.

<u>06. பொது விடயங்கள்</u>

06.1 இவ் வேலைத்திட்டம் 2017.03.16ம் திகதியில் இருந்து 2019.03.15 வரையான காலப்பகுதிக்கு மாத்திரம் செயற்படுத்தப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ் வேலைத்திட்டம் காலாவதியாவதுடன் இக்காலம் முடிவடைவதற்கு முன்னர் இவ் வேலைத்திட்டத்தினை நிறுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தீர்மாணம் எடுப்பின் அது தொடர்பாக தாங்களுக்கு அறிவிக்கப்படும் திகதியில் இருந்து இவ் வேலைத்திட்டம் முடிவுறுத்தப்படும்.

06.2. இவ் ஆலோசனைச் சுற்று நிருபத்தினை முதலில் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பித்து இவ் வேலைத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

06.3 இவ் வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தவுள்ள கடன் திட்டம் தொடர்பாக முகாமையாளர் பிரிவுச் சமுர்த்தி உத்தியோகத்தர் ஊடாக அங்கத்தவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.

06.4. உரிய அங்கத்தவரின் சுய விருப்பத்தின்படியே இவ் வசதியினைப் பெற விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதற்கான தகவல்களை வழங்கும் நடவடிக்கைகள் மாத்திரமே தங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

06.5. இதன் பின்னர் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் சலுகையுடனான கேஸ் சிலிண்டர் உள்ளிட்ட பொருட் தொகுதி வழங்குதல் தொடர்பாக மிக விரைவில் தங்களுக்கு அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

6.6. இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் வ/ப லா∴ப்ஸ் நிறுவனத்தின் பின்வரும் உத்தியோகத்தர்களுடன் தொடர்பை ஏற்படுத்தவும்.

- எட்சன் சமரசேகர (பிரதிப் பொது முகாமையாளர் - புதிய விநியோகம்) - 077 3706277
- நளின்த அத்தநாயக்க (முகாமையாளர் - புதிய விநியோகம்) - 077 3139195

K.K.L. சந்திரதிலக்க
பணிப்பாளர் (குறுநிதி)
பணிப்பாளர் நாயகத்துக்காக

**பிரதி –**

01. செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு - தகவலுக்காக
02. சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - தக, உ.ந. பொருட்டு
03. சகல பிரதேச செயலாளர்களுக்கும் - தக, உ.ந. பொருட்டு
04. பிரதம உள்ளக கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - தக, உ.ந. பொருட்டு

Translated By: - I. Aliyar (District Coordinator - N/E)